தெரிந்தெடுப்பதற்கு ஒய்.எம்.சி.ஏ. கல்லூரியைத் தெரிந்தெடுக்க வேண்டுமென்றும், அதற்கு மத்திய அரசு தேவையான அளவு உதவி செய்ய வேண்டுமென்ற கருத்து மத்திய அரசிடம் எடுத்து வைக்கப்பட்டிருக்கிறது. இதுகுறித்து மத்திய அரசிடமிருந்து பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

*Separate wing for Architecture*

*484 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to open an independent Architectural Wing in this State as recommended by the State Administrative Reforms Commission; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** ஆட்சி சீர்திருத்தக் கழகம் செய்த சிபாரிசுகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

**திரு. என். டென்னிஸ்:** எப்போது அவைகள் நடைமுறைக்கு வரும்?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பரிசீலனையில் இருக்கிறது. முடிந்த உடன் நடைமுறைக்கு வரும்.

அண்ணாசாலையில் சுரங்கப்பாதை

*485. வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை, அண்ணாசாலையில் மின் வாரியத் தலைமை அலுவலகத்திற்கு அருகில் சுரங்கப் பாதை அமைக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** ஆம்.

**திரு. சு. துரைசாமி:** அமைச்சர் அவர்கள் ஆம் என்றார்கள். அப்படியானால் அந்த வேலை எப்போது எடுத்துக்கொள்ளப்படும்? எப்போது முடிவுறும்? அதற்காகும் செலவு என்ன?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** 12.75 லட்சம் ரூபாய் செலவில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கிறது. 1974–75 நிதிநிலை அறிக்கையில் அநேகமாக எடுத்துக்கொள்ளப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பாதசாரி போக்குவரத்துக்கு எந்த இடத்தில் சரியாக இருக்கும் என்று ஆராய்ந்து பார்த்த பிறகு இடம் தேர்ந்தெடுக்கப்படும்.

**திரு. நா. வீராசாமி :** சென்னையில் நெரிசல் அதிகமாக இருப்பதால் ஒவ்வொரு இடத்திலும் இப்படி சுரங்கப் பாதை அமைக்க 10 அல்லது 12 லட்சம் ரூபாய் செலவாகிறது. இப்படிப்பட்ட சுரங்கப் பாதைகளை ரோடு க்ராஸ் செய்வதற்காகத்தான் பயன்படுத்துகிறார்கள். பம்பாய் போன்ற பெரிய நகரங்களில் இப்படி மக்கள் சாலைகளை க்ராஸ் செய்வதற்கு இரும்பால் செய்யப்பட்ட மேம்பாலங்கள் தனியார் முன்வந்து அமைப்பதற்கு அங்கு அனுமதிக்கிறார்கள். அப்படி சென்னை நகரிலும் தனிப்பட்ட கம்பெனிகள் இரும்பால் செய்யப்பட்ட மேம்பாலங்களை அமைக்க முன்வந்தால் அதற்கு நம் அரசு அனுமதி வழங்குமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** இதுவரையில் எந்தக் கம்பெனியும் முன்வரவில்லை. வந்ததற்குப் பிறகு யோசிக்கலாம்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** சென்னை போன்ற பெரிய நகரங்களில் இப்படிப்பட்ட சப்-வேக்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அதேமாதிரி மதுரையில் குறிப்பாக பஸ் ஸ்டான்ட் பக்கத்தில் ரொம்ப நெருக்கடியாக இருக்கிறது. அங்கு ஒரு சப்-வே அமைக்கவேண்டுமென்று ஏற்கனவே ஒரு கோரிக்கை வந்துள்ளது. அது குறித்து அரசாங்கத்தினிடம் ஏதாவது செயற் குறிப்புண்டா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தனிக் கேள்வி போட்டால் அதுபற்றிய விவரங்களை அறிந்து தெரிவிக்கிறேன்.